ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1456/22 - 2006 අගෝස්තු 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.08.03
1456/22 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ.11/89 (II).

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்கு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

நிமால் சிறிபால டீ சில்வா,
சுகாதாரப் பராமரிப்பு மற்றும்
போஷாக்கு அமைச்சர்.

கொழும்பு,
2006, ஓகத்து 2.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 2006 ஆம் ஆண்டின் உணவு (மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவுகளின் இறக்குமதி, விற்பனை மற்றும் சீட்டுத் துண்டிடுதல் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அவை 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆளெவரும் -

(அ) மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட அங்கஜீவியை மனித நுகர்வுக்கான உணவாக ;

(ஆ) மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட அங்கஜீவிகளைக் கொண்டுள்ள அல்லது அவை அடங்கியுள்ள ஏதேனும் உணவை ;

(இ) மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட அங்கஜீவிகளிலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட சேர்வைப் பொருட்கள் அடங்கிய ஏதேனும் உணவை

பிரதம உணவு அதிகாரியின் (இதனகத்துப்பின்னர் “அதிகாரி” எனக் குறிக்கப்படுவார்) அங்கீகாரமின்றி இறக்குமதி செய்தலோ, ஏற்றிச் செல்லுதலோ, விநியோகித்தலோ விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு வழங்குதலோ ஆகாது.

3. ஒழுங்குவிதி 2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உணவு அல்லது உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருட்கள் –

(அ) பாவனையாளரின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிப்பனவாக இருத்தலாகாது ;

(ஆ) பாவனையாளர்களால் வழமையாக நுகரப்படும் உணவின் அல்லது உணவுச் சேர்வைப் பொருளின் உணவு அல்லது உணவு போஷாக்குப் பெறுமதிக்கு எதிராக அத்தகைய பாவனையாளருக்குப் பிரதிகூலமான விதத்தில் போஷாக்கு ரீதியில் வித்தியாசப்படுத்தலாகாது ;

4. இரண்டாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட உணவை அல்லது உணவுத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருட்களை இறக்குமதி செய்ய அல்லது களஞ்சியப்படுத்த அல்லது விற்பனை செய்ய அல்லது விற்பனைக்கு முன்வைப்பதற்கு உத்தேசிக்கின்ற ஆளெவரும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. (1) நாலாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம் –

(அ) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதிகள் உட்பட அவசியமான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) டீ. ஒக்ஸிரைபோநியூகிளிக் அமிலத்திலும் (டீஎன்ஏ) புரதத்திலும் செய்யப்பட்ட திரிபுபடுத்தல், செய்முறை, இந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் நாடுகள், அத்துடன் உணவு அல்லது உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருட்கள் 3 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்ட மூலப்பிரமாணங்களுடன் இணங்கியொழுகுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுவதற்குள்ள வேறு எவையேனும் விடயங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

(இ) பதினோராம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கிணங்க முன்வைக்கும் மற்றும் சுட்டுத்துண்டிடும் முறையை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(2) நாலாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் விண்ணப்பமானது உணவு அல்லது உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருள் தொடர்பில் உடனடியாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு முறையில் தொகுக்கப்பட்ட அத்தகைய தகவலுடன் சேர்த்தனுப்படுதல் வேண்டும்.

6. அதிகார சபை விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுள் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமையை எழுத்தில் ஒப்புறுதி செய்தல் வேண்டும். ஒப்புறுதியில் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதி உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதிகார சபையானது உணவு மதியுரைக் குழுவின் (இதனகத்துப்பின்னர் உ. ம. கு.) விதிப்புரையின் மீது விஞ்ஞான ரீதியிலான எதிர்மறை விளைவு மதிப்பீட்டறிக்கையொன்றிக்காக உடனடியாக அதிகார சபையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் கணிப்பீட்டுக் குழுவொன்றுக்கு (இதனகத்துப்பின்னர் தொ. க. கு எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமர்பித்தல் வேண்டும்.

7. விண்ணப்பத்தில் கொடுத்துதவப்பட்ட தகவலையிட்டு தொ. க. கு. திருப்தியுறுமிடத்து அதனால் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் தொ. க. கு. வால் விஞ்ஞான ரீதியிலான எதிர்மறை விளைவுபற்றிய அறிக்கையொன்று வழங்கப்படுதல் வேண்டும். தொ. க. கு. விண்ணப்பத்திற்கு ஆதாரமாக குறைநிரப்புத் தகவல் வழங்குமாறு விண்ணப்பதாரரிடம் வேண்டுகோள் விடுக்கலாம். இத்தகவல், வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் வழங்கப்படுதல் வேண்டும். அறிக்கை தயாரிப்பதற்கான மூன்றுமாத காலப்பகுதி விண்ணப்பதாரரால் வாய்மொழியான அல்லது எழுத்திலான விளக்கம் என்ற வகையில் தகவல் வழங்கப்படும்வரை நீடிக்கப்படுதல் வேண்டும்.

8. அதிகார சபையானது பெயராளவிலான முறைவழிப்படுத்துதல் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணமொன்றை அறவிடுதல் வேண்டும். மீளளிக்கப்படாத வைப்பீடொன்றாக அதிகார சபையால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படவேண்டிய இக்கட்டணம் விண்ணப்பதாரரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

9. அதிகாரசபை தொ. க. கு. வின் அறிக்கையை உ.ம. கு.வுக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உ. ம. கு. வின் முடிவை விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

10. விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு இந்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க அனுமதி அளிக்கப்படுமிடத்து விண்ணப்பதார் உற்பத்திப் பொருளுக்குத் தோதானவாறு சுட்டுத் துண்டிடப்படுவதற்கமைய உற்பத்தி பொருட்களை சந்தையில் வைப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

11. மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்படும் உணவின் அல்லது உணவுச் சேர்வைப் பொருள் சிப்பத்தின் மீதுள்ள அல்லது அதில் இணைக்கப்பட்டுள்ள சுட்டுத்துண்டின் அல்லது சிப்பத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் உணவின் அல்லது உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருட்களின் பெயருடன் அல்லது பதப்படுத்தும் உதவியுடன் சேர்த்து மரபியல் ரீதியில் பதப்படுத்தப்பட்டது என்னும் கூற்று உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(அ) **உதாரணம் 1 :** ஒரு சேர்வைப் பொருளைக் கொண்ட மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவுகளுக்கு "சோய் மா- மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்டது" அல்லது "சோய் மா - மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட சோயா அவரையிலிருந்து".

(ஆ) **உதாரணம் 2 :** மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட சேர்வைப் பொருட்களுக்கு "சேர்வைப் பொருட்கள் சோயா புரத பிரித்தெடுப்பு (மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்டது) மோல்டோ டெக்ஸ்ட்ரீன், காய்கறி எண்ணெய், குழம்பாக்கி (ஐஎன்எஸ் 471)

12. மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவு, உணவு சிப்பமொன்றில் அல்லாமல் வேறு வகையில் சில்லறை விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படுமிடத்து, II ஆம் ஒழுங்குவிதியின் கீழ் தேவைப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் தகவல் அது உணவுடன் இணைக்கப்பட்டவிடத்து போதியளவு சுட்டுத்துண்டிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

13. சைபர் தசம் ஐந்து சத வீதத்திற்கும் (0.5%) குறைவான மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட சேதனவுறுப்பு அடங்கியுள்ள அல்லது அதனைக் கொண்டுள்ள உணவு இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

ஆயினும் அத்தகைய மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட சேதனவுறுப்பு இருப்பது தொழில்நுட்பரீதியில் அவசியமானதாகவும் சேதனவுறுப்பு விஞ்ஞான ரீதியிலான எதிர்மறை விளைவு மதிப்பீடொன்றுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பானதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

14. இந்த ஒழுங்குவிதிகளால் அங்கீகரிக்கப்பட்ட உணவின் அல்லது மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவின் பயன்பாடு மனித சுகாதாரத்திற்கு ஆபத்து ஏற்படுத்தும் எனப் புதிய தகவல் அல்லது உளதாம் தகவலின் மீள் மதிப்பீடொன்று வெளிப்படுத்துமிடத்து அதிகாரசபை அத்தகைய உணவின் விற்பனையை உடனடியாக இடைநிறுத்துதல் வேண்டும். அதிகாரசபை. உற்பத்திப் பொருளை சந்தையிலிருந்து கைவாங்குமாறு அத்தகைய உணவை விடயத்திற்கேற்ப இறக்குமதி செய்வதற்கு, ஏற்றிச் செல்வதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்த ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் உடனடியாக தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

15. விண்ணப்பமொன்று மறுக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பகாரர் விண்ணப்பத்திற்கு ஆதாரமாக ஏதேனும் மேலதிகத் தகவலுடன் அத்தகைய மறுப்பின் ஒரு மாத காலத்திற்குள் அதிகார சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

16. பதினைந்தாம் பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு தொ. க. கு. வுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். தொ. க. கு. அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற முப்பது வேலைநாட்களுக்குள் விண்ணப்பத்தை மேலும் பரிசீலனை செய்வதற்கு உ. ம. கு. வுக்கு அனுப்பப்படவேண்டிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

17. ஓர் உணவு அல்லது உணவு சேர்வைப்பொருள் தொடர்பில் ஒரு மேன்முறையீடு மட்டுமே இருத்தல் வேண்டும். உ. ம. கு. ஒரே உணவு அல்லது சேர்வைப் பொருள் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

18. அதிகாரசபை அதன் மறுமொழியை தொ. க. கு. விடமிருந்து முடிவு கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் அதிகார சபைக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அதிகார சபை அம்முடிவிற்கான காரணங்களைக் குறிப்பிட்டு உ.ம. கு. வின் முடிவை விண்ணப்பகாரருக்குத் தெரிவித்தல் வேண்டும். உ. க. கு. வின் முடிவே தீர்க்கமானதாதல் வேண்டும்.

19. ஒழுங்குவிதி 17 என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் விண்ணப்பதாரர் எவரும் 4 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க ஒரே உணவு அல்லது உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்வைப் பொருள்கள் தொடர்பில் புதிய விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

**அட்டவணை - 1**

சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி (பிரதான உணவு அதிகாரி).

மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவை/உணவுச் சேர்வைப் பொருட்களை அல்லது அவற்றுடன் தொடர்புடைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பம்

நான்/நாம் 4.1 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி கீழே கொடுத்துதவப்பட்ட விபரங்களைக்கொண்ட மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவை இறக்குமதி செய்ய/ மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவை இறக்குமதி செய்து விற்பனை செய்ய/ உணவு சேர்வைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதற்கு மரபியல் ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட பதார்த்தங்களை இறக்குமதி செய்ய/ மரபியல்பு ரீதியில் திரிபுபடுத்தப்பட்ட உணவைத் தயாரித்து/பதப்படுத்தி/உற்பத்தி செய்து விற்பனை செய்ய விரும்புகின்றேன்/ விரும்புகின்றோம்.

| | |
|---|---|
| 1. விண்ணப்பதாரியின்/விண்ணப்பதாரிகளின் பெயரும் முகவரியும் ஒழுங்கமைப்பின் அல்லது வியாபாரத்தின் இயைபான தகவலும் | |
| 2. உத்தேசிக்கப்பட்ட இறக்குமதிக்கான உணவினது அல்லது உணவு சேர்வைப் பொருட்களினது விவரணமும் விவரக் கூற்றுக்களும் | |
| 3. உணவின் உற்பத்தி/தயாரிப்பு முறை பற்றிய விரிவான விவரணங்கள் | |
| 4. ஓம்புயிரியின் அல்லது உணவின் விரிவான விவரணம் | |
| 5. வழங்குயிரி உரிமங்களின் விவரணம் | |
| 6. உற்பத்திப் பொருளில் ஊட்டச்சத்துக்கள், நச்சுப் பொருட்கள் அல்லது ஒவ்வாமை சார்ந்த எதிர்வினை முதலியவற்றிலான மாற்றங்கள் பற்றிய தகவல் | |
| 7. உணவின் பாதுகாப்பான தன்மையை எடுத்துக் காட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதிகளும் கைவசமுள்ள வேறேதேனும் விடயமும் | |
| 8. உணவு மரபுவழி உணவிலிருந்து வித்தியாசமான தல்ல என்ற நிகழ்வைத் தீர்மானிக்கும் தரவு என்ற வகையில் பகுப்பாய்வு அறிக்கையினால் ஆதாரம் | |
| 9. தோதானவிடத்து பயன்பாட்டிற்கும் கையாள்வதற்கு மான குறித்துரைக்கப்பட்ட நிலைமைகள் உட்பட அதிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளை சந்தையில் வைப்பதற்கான நிலைமைகள் | |
| 10. மாதிரிகையை எடுத்தலும் நிலைமாறும் நிகழ்வை இனம் காணுதலும் உட்பட கண்டுபிடிக்கும் முறை ஏற்புடைத்தானவிடத்து உணவில் அல்லது அதிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உணவில் நிலைமாறும் சம்பவத்தைக் கண்டுபிடிப்பதற்கும் இனம் காண்பதற்குமான முறை | |

| | |
|---|---|
| 11. வழங்கப்பட்ட திரிபுபடுத்தப்பட்ட உணவின் மாதிரிகைகளும் அவற்றின் கட்டுப்பாடுகளும் | |
| 12. வேறு ஏதேனும் நாட்டில் அல்லது நாடுகளில் அதே உணவின் அல்லது அதைப்போன்ற உணவின் அங்கீகாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான ஆவணங்கள் | |
| 13. சந்தைப்படுத்துதலுக்குப் பின்னரான கண்காணிப்பிற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டம் | |
| 14. கணிப்பீட்டு முறைவழிக்கு வசதி செய்வதற்கும் துரிதப்படுத்துவதற்கும் விண்ணப்பத்திற்கு இயைபான வேறு ஏதேனும் விடயம் | |

* பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடவும்.

என்னால்/எம்மால் கொடுத்துதவப்பட்ட தகவல் எனது/எமது அறிவுக்கெட்டியவரை உண்மையானதும், செம்மையானதுமாகும் எனவும் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் பின்னர் செம்மையற்றது எனக் காணப்படும் பட்சத்தில் அல்லது விஞ்ஞான ஆராய்ச்சியால் வழங்கப்பட்ட புதிய தகவலின் அடிப்படையில் மீளாய்வு தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக நான்/நாம் பிரதான உணவு அதிகாரிக்கு அறிவிப்பேன்/அறிவிப்போம் எனவும் இத்தால் நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/ உறுதிப்படுத்துகின்றோம். பிரதான உணவு அதிகாரியால் தேவைப்படுத்தப்படும்பொழுதெல்லாம் விண்ணப்பம் மற்றும் இயைபான உற்பத்திப் பொருள் தொடர்பிலான ஏதேனும் மேலதிகத் தகவலை வழங்கவும் நான்/நாம் பொறுப்பேற்கின்றேன்/பொறுப்பேற்கின்றோம். மேலும் அங்கீகாரம் வழங்கப்படும் பட்சத்தில் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி, உற்பத்தி/பதனிடல், சிப்பம் செய்தல், சுட்டுத்துண்டிடுதல், களஞ்சியப்படுத்துதல், ஏற்றிச் செல்லல் அத்துடன் விற்பனை தொடர்பில் பிரதான உணவு அதிகாரியால் விதித்துரைக்கப்படும் எல்லா நிபந்தனைகளுக்கும் அமைந்து ஒழுங்குவதற்கு நான்/நாம் பொறுப்பேற்கின்றேன்/பொறுப்பேற்கின்றோம்.

.............................................................................,
விண்ணப்பதாரியின்/விண்ணப்பதாரிகளின்
கையொப்பம்/கையொப்பங்கள்.

திகதி ;-

**குறிப்பு**.- மேலே கோரப்பட்ட எல்லாத் தகவல்களையும் விரிவாகக் கொடுத்துதவுமாறு விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர். விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை அல்லது விடயங்களைப் பற்றிய குறிப்பீடு அந்தந்த நிரைகளில் செய்யப்படுதல் வேண்டும். எவையேனும் விசேட காரணங்களுக்காக குறித்த சில வினாக்கள் தொடர்பில் அவர்களால் தகவல் வழங்க இயலாதிருப்பின் ஏன் அவர்களால் அவ்வாறு செய்ய இயலாதிருக்கின்றது என்பதனை விளக்குதல் வேண்டும்.

*8- 629*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.